# அன்னைக்கு ஒப்புக்கொடுக்கும் செபம்

அன்னை மரியே! மனிதகுல மீட்புக்காக, இயேசுகிறித்துவின் தாயாகவும்,திருச்சபையின் தாயாகவும், உம்மைத் தேர்ந்தெடுத்த மூவொரு கடவுளின் பெயராலும், அவருடைய மகிமைக்காகவும், திருமுழுக்கின் மூலமாக திருச்சபையில் இயேசுகிறித்துவின் மறைபொருளை வாழ்கின்ற நான், எனது தகுதியின்மையை அறிந்தபோதிலும், உமது தாயன்பில் நம்பிக்கை கொண்டு, என்னை முழுவதும் இன்று உம் கரங்களில் ஒப்படைக்கின்றேன்.

என் வாழ்க்கைப்பயணத்தில் உம்மோடு இணைந்து வழிநடக்கவும், உலக மீட்பிற்காக திருச்சபையில் உம்மோடு ஒத்துழைக்கவும், எனது பிறரன்புப் பணியை நாள்தோறும்

முழுமையாக ஆற்றவும், உமது விசுவாச ஒளியோடு, உம்மைப்போல நற்செய்திக்கு சான்று பகரவும், அனைவரையும் முழுமையாக அன்பு செய்யவும், தூய ஆவியின் அருளால், உமது அருள்மிகு தாய்மையை என்னில் நிலைத்திருக்கச் செய்து, எனது ஒவ்வொரு செயலையும், எனது வாழ்க்கையையும் இன்றும் என்றும் பிறரன்புப் பணிக்காக அர்ப்பணிக்க அருள் புரியும்.

அன்புத்தாயே! உம்மைப்பற்றி நான் ஆழமாக புரிந்துகொள்ள, அறிந்துகொள்ள உதவிபுரியும். உம்மைப்போல அமைதியில் இறைவனை தியானிக்க, ஆண்டவரின் பணிக்கு தாழ்மையுடன் என்னை கையளிக்கச் செய்தருளும். உம்மைப்போல இறைவனுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் எனது உண்மையான அன்பை வெளிப்படுத்த, உமது இதயத்தை எனக்கு தாரும். ஆமென்.

திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டது

அன்னை மரியாவோடு புது உலகம் நோக்கி...